உதவி அமர்வு/சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.
ஓ.எஸ்.எண்.87/17

| | |
|---|---|
| பெயர் | .. மாரியம்மாள்(வா.சா.1) |
| த/பெ. க/பெ. | ..நல்லசாமி |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| ஜாதி | .. |
| மதம் | .. |
| வயது | .. |

*1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.*
*23/10/2018*

*முதல் விசாரணை:-*

*எனது பெயர் மரியம்மாள். எனது கணவர் பெயர் நல்லசாமி. நான் மேற்படி முகவரியில் குடியிருக்கிறேன். நான் வாதி. நான், எனது தரப்பு முதல்விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விசயங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான்.*

*வா.சா.ஆ.1 28/07/1945 தேதியிட்ட 1வது தபசில் 4, 6 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல்*

*வா.சா.ஆ.2 26/04/1938 தேதியிட்ட 1வது தபசில் 7வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல்*

*வா.சா.ஆ.3 25/08/1942 தேதியிட்ட 1வது தபசில் 8வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல்*

*வா.சா.ஆ.4 18/12/1939 தேதியிட்ட 1வது தபசில் 10வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல்*

*வா.சா.ஆ.5 02/06/1943 தேதியிட்ட 1வது தபசில் 11, 12 வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல்*

*வா.சா.ஆ.6 02/08/1928 தேதியிட்ட 1வது தபசில் 13வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல்*

*வா.சா.ஆ.7 19/07/2017 தேதியிட்ட 1வது தபசில் 15வது அயிட்ட சொத்துக்குரிய நிலவரித்திட்ட தூய சிட்டா*

*வா.சா.ஆ.8 03/10/1980 தேதியிட்ட 2வது தபசில் 3வது அயிட்ட சொத்தைப் பொறுத்து குருசாமி நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல்*

*வா.சா.ஆ.9 05/11/1981 தேதியிட்ட 2வது தபசில் 2வது அயிட்ட சொத்தைப் பொறுத்து குருசாமி நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல்*

*வா.சா.ஆ.10 05/06/1986 தேதியிட்ட 2வது தபசில் 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து குருசாமி நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல்*

*வா.சா.ஆ.11 05/05/1980 தேதியிட்ட 2வது தபசில் 4வது அயிட்ட சொத்தைப் பொறுத்து குருசாமி நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல்*

*வா.சா.ஆ.12 10/04/2015 தேதியிட்ட பிராது 1வது தபசில் 1 முதல் 12வது அயிட்ட சொத்துக்கள் மற்றும் 2வது தபசிலில் 1, 2 அயிட்ட சொத்துக்களுக்குரிய பட்டா (பட்டா எண்.346)*

*வா.சா.ஆ.13 10/04/2015 தேதியிட்ட பிராது 1வது தபசில் 13வது அயிட்ட சொத்துக்களுக்குரிய பட்டா (பட்டா எண்.341)*

*வா.சா.ஆ.14 10/04/2015 தேதியிட்ட பிராது 2வது தபசில் 3வது அயிட்ட சொத்துக்களுக்குரிய பட்டா (பட்டா எண்.1605)*

*வா.சா.ஆ.15 10/04/2015 தேதியிட்ட பிராது 2வது தபசில் 4வது அயிட்ட சொத்துக்களுக்குரிய பட்டா (பட்டா எண்.330)*

*வா.சா.ஆ.16 15/12/2014 தேதியிட்ட கோவில்பட்டி சார்பதிவாளர் வழங்கிய குருசாமி நாயக்கர் இறப்பு சான்றிதழ்*

*வா.சா.ஆ.17 18/10/2013 தேதியிட்ட கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்கிய சீனியம்மாள் இறப்பு சான்றிதழ்*

*வா.சா.ஆ.18 31/10/2014 தேதியிட்டகோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்கிய ராமசுப்பு இறப்பு சான்றிதழ்*

*வா.சா.ஆ.19 07/04/2000 02/12/2014 ஆகிய தேதிகளில் பட்டா எண்கள்.341, 346, 1605 பட்டாக்களுக்கு குருசாமி நாயக்கர் பெயரில் உள்ள தீர்வை ரசீதுகள்-3 எண்ணம்*

*வா.சா.ஆ.20 23/03/2015 தேதியிட்ட குருசாமி நாயக்கரின் வாரிசு சான்றிதழ்*

*பிரதிவாதி 1,4 மற்றும் 6 தரப்பில் கு.வி-*

*நான் இந்த வழக்கின் 4ம் வாதி ஆவேன். நான் பிராதில் சொல்லியுள்ள 1வது தபசில் சொத்து குருசாமிநாயக்கருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால்*

சரிதான். 2வது தபசில் சொத்து குருசாமிநாயக்கருக்கு சுய சம்பாத்ய முறையில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1வது தபசில் சொத்தில் 1வது பிரதிவாதிக்கு 8/28 ல் பங்கும் 2ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும் இறந்து போன ராமசுப்பின் வாரிசுகளான 4, 5, 6 பிரதிவாதிகளுக்கு சேர்த்து மொத்தத்தில் 8/28 பங்கும் கிடைக்ககூடியது என்றும், 3வது பிரதிவாதிக்கு 1/28 பங்கும், 1ம் வாதிக்கு 1/28 பங்கும் 4ம் வாதியான எனக்கு 1/28 பங்கும், இறந்துபோன சீனியம்மாளின் வாரிசுகளான 2, 3 வாதிகளுக்கும் சேர்த்து 1/28 பங்கும் கிடைக்ககூடியது என்றால் சரிதான். அதேபோல் 2ம் தபசில் சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தலா 1/7 பங்கும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சேர்த்து 1/7 பங்கும், 1, 4 வாதிகளுக்கு தலா 1/7 பங்கும், 2, 3 வாதிகளுக்கு சேர்த்து 1/7 பங்கும் கிடைக்ககூடியது என்றால் சரிதான். 3வது தபசில் சொத்தில் 7வது பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டிம் கட்டியுள்ளார் என்றால் சரிதான்.ஆனால் 7ம் பிரதிவாதிக்கு சொத்தில் எந்தவித பங்கும் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு 7ம் பிரதிவாதி கடமைபட்டவர் என்றால் சரிதான். இந்த 1, 4, 6 பிரதிவாதிகள் பிராது தபசில் தங்களுக்குரிய பங்குகளை கிடைப்பதற்கு தனித்தனியாக நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். அவ்வாறு 1, 4, 6 பிரதிவாதிகளுக்கு அவர்களுக்குரிய பங்கை ஒதுக்கி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றால் சரிதான்.